**வத்தேகம நகர சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வத்தேகம நகர சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த வருமானச் செலவினக் கணக்கு, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அதிகாரம்) 181 (I) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடுகண்ணாவ நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான

உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.
என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காயவு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 75,485 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | 2021 ஆம் ஆண்டின் போது சீராக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பேன் | அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஆ) | மீளாய்வாண்டிற்குரிய நிர்மாணக் கடன்பட்டோருக்காக செலுத்த வேண்டிய பெறுமதி 03 வேவலைகளுக்கு ரூபா 773,506 கூடுதலாகவும் 02 வேலைகளுக்கு ரூபா 84,580 குறைவாகவும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது அதனை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன் | அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (இ) | சபையிடம் பௌதீக ரீதியில் காணப்படாத ரூபா 423,990 பெறுமதியான 04 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | இதற்காக குழுவொன்று நியமித்து வழங்கும் அறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பேன் | அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | ஊழியர் கடன் மீதி மொத்தம் ரூபா 45,000 ஆல் குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்கின் பிரகாரம் ஆராயந்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். | அடுத்த ஆண்டில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சீராக்கம் செய்யப்பட வேண்டும் |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் 03 கணக்கு விடயங் களுக்குரிய ரூபா 21,398,540 கூட்டுப் பெறுமதியாக இருந்ததுடன் அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி ரூபா 22,373,647 ஆக இருந்தமையால் ரூபா 1,657,445 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. | உரிய மீதிகளின் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்கு சீராக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூலமான சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 2,603,238 ஆன 04 கணக்கு விடயங்களுக்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை ிருப்திகரமாக உறுதிப்படுதத்ப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய அட்டவணைகளை சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதாக | கணக்காய்விற்கு தேவையான அனைத்து சான்றுகளும் வழங்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 14,055,072 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,398,117 ஆக இருந்தது. அதற்கு மீளாய்வாண்டின் மீண்டெழும் வருமானம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக 6 சதவீதத்தினால் அதிகரித்தமை தாக்கமளித்திரந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடபபட வேண்டியிருந்த ரூபா 3,866,,457 ஆன நிலுவை வீத வரி மீதியில் ஓராண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்த அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய ரூபா 337,556 தொகை மற்றும் தனியார் குத்தகையாளர்களிடமிருந்து அறவீடு செய்யப்பட வேண்டிய ரூபா 1,965,748 அறவிடப்பட்டிருக்கவில்லை. | கொரோனா தொற்றுநோய் காரணமாக நடமாடும் சேவைகள் மற்றும் ஆதனங்களை தடை செய்வதற்கு சிக்கலான நிலைமை உருவாகியமை அரச நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய தொகை தொடர்பாக உரிய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**(ஆ) கடை வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் 05 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 117,446 ஆன கடை வாடகை அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடை உரிமையாளர்களுக்கு கடிதங்கள் அனுப்பி அறிவுறுத்தப்பட்டுள்ளது. | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ii) | நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத சபைக்குரிய 30 கடைகளுக்காக 2017 ஆம் ஆண்டின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மதிப்பீட்டு வாடகை அறவிட்டு வந்ததுடன் மதிப்பீடு உள்ளடக்கப்பட்டு உடன்படிக்கை மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் மூலம் உரித்தினை மீளப் பெறும் செயற்பாட்டின் மூலம் எதிர்வரும் நடவடிக்கைகளை எடுத்து இதனை சீராக்க நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

நகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய வீதவரி, நீர் கட்டணங்கள், முற்கொடுப்பனவு மற்றும் கைத்தொழில் கடன்பட்டோர் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,870,146 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 6,706,213 ஆன 1 ஆண்டிற்கு மேற்பட்ட கணக்கு மீதிகள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | கொவிட் தொற்று நோய் தொற்றின் கூலம் இந்நிலுவை வருமானத்தை அறவிடுவது சிக்கலான நிலைமையொன்றுக்கு உட்பட்டுள்ளதாக அறிய தருகின்றேன். . | தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கைத்தொழில் கடன்கொடுத்தோர் ரூபா 9,311,642, நானாவித கடன்கொடுத்தோர் ரூபா 216,460 மற்றும் அரச நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய ரூபா 750,378 என மொத்தம் ரூபா 10,278,480 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் தீர்வு செய்யப்படாதிருந்ததுடன் அதில் ரூபா 117,437 ஆன 01 வருடத்தை மிகைத்த கணக்கு மீதிகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன. | அடுத்தஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மூலம் தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேள் | தாமதமின்றி தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கரிய 8 ½ ஏக்கர் அளவிலான காணியில் 1980 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட 30 வீடுகளிலிருந்து சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,037,309 தொகை முறையாக அறவிட்டு பணம் செலுத்திய காணி உரிமையாளர்களுக்கு உரித்து உறுதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கௌரவ ஆளுனரின் அங்கீகாரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் அந்த அங்கீகாரம் கிடைத்த பினன்ர் உரித்து உறுதி வழங்கி செயற்பாடுகளை பூர்த்தி செய்வேன். | சபைக்கு அறவிடப்பட வேண்டிய பணத்தை முறையாக அறவிடுவதற்கும் உரித்து உறுதி வழங்கப்படாத காணி உரிமையாளர்களுக்கு உறுதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |